**அருள்மிகு சுப்பிரமணியசுவாமி, திருக்கோயில், திருச்செந்தூர்**

**விளம்பர அறிவிப்பு**

**ந.க.எண். 4227/2023/அ 5 / நாள் : 12.01.2024**

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் காலியாக உள்ள இளநிலை மின் பொறியாளர் பணியிடத்திற்கு தகுதி உள்ள இந்து சமயத்தை சார்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய கடைசி நாள் – 14.02.2024 மாலை 05.45 மணி வரை மட்டும் திருக்கோயில் இணையதளத்தில் (www.tiruchendurmurugan.hrce.in.gov.in) விண்ணப்பங்கள் பதிவிறக்கம் செய்யலாம்.

| வ. எண் | பணியிட விபரம் | சம்பள தொகுப்பு Pay Matrix Level | காலியாக உள்ள பணியிடம் | கல்வித்தகுதி |
|---|---|---|---|---|
| 1. | இளநிலை மின் பொறியாளர் | level 31 – 35900 – 113500 | 1 (ஒன்று) | மின் பொறியியலில் பட்டயப்படிப்பு |

**நிபந்தனைகள்**

1. இந்து மதத்தை சார்ந்தவராகவும், தமிழ்நாட்டை சார்ந்தவராகவும் இருக்க வேண்டும்.
2. தொற்று நோய் உடல் அல்லது மனநிலை குன்றிய குறைபாடுகள் உள்ளவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்
3. I). நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள்
   II).பட்ட கடனை தீர்க்க முடியாதவர்கள் என நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டவர்கள்
   III).அரசுப்பணிகள், பொது ஸ்தாபனங்கள் மற்றும் வேறு இடங்களில் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் ஆகியோர்கள் மேற்படி பணிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்
4. நன்னடத்தை உடையவராக இருக்க வேண்டும். இதற்கு அரசிதழ் பதிவு பெற்ற அரசு உயரதிகாரிகளியிருந்து பெறப்பட்ட நன்னடத்தைச் சான்று மற்றும் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்
5. இந்த வேலை வாய்ப்பு அறிவிப்பு வெளியிடும் தேதிக்கு முன்னதாக வரப்பெற்ற விண்ணப்பங்களும், 14.02.2024–ம் தேதி மாலை 05.45 மணிக்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
6. விண்ணப்பம் அனுப்பப்படும் மேலுறையின் மீது கண்டிப்பாக பதவியின் பெயர் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும்.
7. வரப்பெற்ற விண்ணப்பங்கள் அனைத்தும் சரிப்பார்க்கப்பட்டு தகுதியுள்ள நபர்களுக்கு மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அறிவிப்பு அனுப்பப்படும்.
8. நேரடி நியமனம் இந்து சமய அறநிலையத்துறை சட்ட விதிகளுக்குட்பட்டவை
9. விண்ணப்பதாரர் நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவராக இருக்க வேண்டும்.
10. விண்ணப்பங்களுடன் அனுப்பப்படும் அனைத்துச் சான்றிதழ்களும் அரசு பதிவு பெற்று அலுவலர் சான்றொப்பம் பெறப்பட்ட புகைப்பட நகல்களாக மட்டுமே இருக்க வேண்டும். அசல் சான்றிதழ்கள் அனுப்ப கூடாது.
11. ராஜீகத்தாலும் தெய்வீகத்தாலும் ஏற்படும் மாற்றங்களுக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.
12. விண்ணப்பங்களுக்கு கட்டணம் கிடையாது.
13. PVR (Police Verification Report) **காவல்துறை நன்னடத்தை சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.**
14. விண்ணப்பதாரர் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி **இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் – 628215, தூத்துக்குடி மாவட்டம்** தொலைபேசி எண்: 04639–242221

**திருக்கோயில் நிர்வாகம்**

**அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்**
**திருச்செந்தூர்**
**ந.க.எண். 4227/2023/அ 5 / நாள் : 12.01.2024**

**விண்ணப்ப ப்படிவம்**

| விண்ணப்பிக்கும் பதவியின் பெயர்: | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பதாரர் பெயர் | |
| 2. | தந்தை/காப்பாளர் | |
| 3. | பிறந்த தேதி வயது (சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்.) | |
| 4. | தற்போதைய முகவரி | |
| 5. | மதம் மற்றும் இனம் (சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்.) | |
| 6. | கல்வித் தகுதி (சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்.) | |
| 7. | முன் அனுபவம் (சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்.) | |
| 8. | அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட நன்னடத்தை சான்று இணைக்கப்பட வேண்டும்.) | |

மேற்காணும் விபரங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் இந்து மதத்தைச் சேர்ந்தவர் என்றும் இணைக்கப்பட்ட சான்றுகள் அனைத்தும் உண்மை என்றும் உறுதி கூறுகிறேன்.

விண்ணப்பதாரரின் ஒப்பம்

குறிப்பு :

1. அனைத்து சான்றுகளும் ஜெராக்ஸ் நகல் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

விண்ப்பதாரருக்கு 01.01.2024 அன்று 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும் 45 வயதுகுட்பட்டும் இருக்க வேண்டும். முன் அனுபத்திற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.